யாக இருந்தும் அப்படிப்பட்ட சமூகவிரோதச் செயல்பாடுகளில் ஈடுபடுவதை கண்டுபிடிக்கும் முயற்சியில் அவர்கள் ஈடுபடவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நிச்சயமாக இந்தப் பள்ளிகள் கதவு இல்லாத பள்ளிகள் வாசலுக்கு கதவு இல்லாத பள்ளிகள் அவைகள் அனைத்தும் இந்த ஆண்டுக்குள் சீர் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் கூறியுள்ளது போல் சமூக விரோதிகள் மாநகராட்சிப் பள்ளிகளில் கள்ளச்சாராயம் விற்பது தீய செயல்களில் ஈடுபடுவது போன்ற முறைகேடுகளைக் களைய போதுமான காவலர்கள் நியமித்து தீயச் செயல்களைத் தடுக்க அரசு முன்னுரிமை தருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதவுகள் இல்லாத பள்ளிகளில் கதவுகள் போடும் பணியை நாம் ஆரம்பித்து இருக்கிறோம். அதோடு கூட ஒரு காவலருக்கு மேல் ஒரு பள்ளிக்கு அதிகமாக காவலர்கள் போடுவதற்கு நிதி வசதி இடம்தராது. அதுமுறையும் அல்ல. கூடுமானவரை அவ்வப்போது கண்காணிப்பதற்கு அங்கே இருக்கிற தலைமை ஆசிரியர், மாநகராட்சியில் உள்ள அலுவலர்கள் உடனடியாகத் தகவல்களை காவல் துறைக்குத் தெரிவிக்குமாறு யோசனை கூறப்பட்டுள்ளது.

(ஆ) நீலகிரி மாவட்டம் கூடலூரில் ஹெலன் குடிநீர்த் திட்டப்பணிகள் முடிவுறாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே. ரமணி மற்றும் கோ. வீரையன் ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''நீலகிரி மாவட்டம் கூடலூர் பேரூராட்சியின் ஹெலன் குடிநீர்த் திட்டப் பணிகள் முடிவடையாமல் இருப்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

1990 மே 5] [டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வ சிகாமணி]

அறிக்கை.

நீலகிரி மாவட்டம் கூடலூர் பேரூராட்சிக்கு உலக வங்கி உதவியுடன் 11-8-1987 தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் அரசு ஆணை எண். 794-ல் ஒரு குடிநீர்த் திட்டம் ரூ. 281.15 லட்சம் மதிப்பீட்டில் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி பாண்டி ஆறு என்கிற ஹெலன் ஓடையிலிருந்து நீர் எடுக்கப்பட்டு கூடலூர் பேரூராட்சிப் பகுதியில் கட்டப்படவிருக்கும் நான்கு தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு நீர் எடுத்துச் செல்லப்பட்டு 10கி.மீ நீளம் கொண்ட பகிர்மானக் குழாய்கள் மூலம் தண்ணீர் விநியோகிக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் நீரின் அளவு இடைக்கால நிலை (1996) மற்றும் உச்ச நிலை (2011) ஆகியவற்றிற்கு முறையே 2.1 மில்லியன் லிட்டர் மற்றும் 2.73 மில்லியன் லிட்டர் ஆகும். கூடலூர் குடிநீர்த்திட்ட வேலைகள் யாவும் முடிக்கப்பட்டு 1989 மார்ச் மாதம் திட்டம் பயனுக்குக் கொண்டுவர முன்பு திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் தலைமைப் பணியிட வேலைகள், சுத்திகரிக்கப்படாத நீர் ஏற்றுக்குழாய் பதிக்கும், வேலைகள், சுத்திகரிப்பு நிலைய வேலைகள், சுத்த நீர் ஏற்றுக்குழாய் பதிக்கும் வேலைகளில் ஒரு பகுதி ஆகியவை மஞ்சுஸ்ரீபிளான்டேசன் கம்பெனிக்குச் சொந்தமான ''ஜன்மன்'' நிலங்களில் செய்யப்பட வேண்டியிருந்ததால் அவர்களுடைய அனுமதி இல்லாமல் மேற்கண்ட வேலைகள் உடனே துவக்கப்பட இயலவில்லை. மஞ்சுஸ்ரீபிளான்டேசன் உரிமையாளரின் அனுமதி நவம்பர் 1988-ல்தான் கிடைத்தது. மேலும் கட்டவிருக்கும் நீர்த்தேக்கத் தொட்டிக்குத் தேவையான நிலம் காவல்துறைக்குச் சொந்தமானது. அதற்கான நில மாற்றத்திற்கான காவல் துறையின் அனுமதி கிடைக்கப்பெற்ற பின்னர் அந்த நீர்த் தேக்கத்தொட்டி கட்டுமான வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

மேலும் இத்திட்டத்திற்குத் தேவையான சுத்திகரிக்கப்படாத மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீர் எடுத்துச் செல்லும் வார்ப்பிரும்புக் குழாய்களுக்கான ஒப்பந்தப் புள்ளிகளை உலக வங்கிக்கு அனுப்பி ஆராய்ந்து முடிவெடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதால் இக்குழாய்கள் 1990 மார்ச் மாதம்தான் பெறப்பட்டது. மேலும், இக்குழாய்களைப் பதிப்பதற்கான ஒப்பந்தப்புள்ளிகளைப் பெற ஒப்பந்தக்காரர்கள் சரியான முறையில் முன்வரவில்லை. இதனால் மேற்படி வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டாம் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கூடலூரில் அதிக மழை காரணமாகவும் தலைமைப்பணியிடம் அமைக்கப்படவுள்ள பாண்டியாற்றில் வெள்ளம் அதிகமாக இருந்தாலும் கட்டுமானப் பணிகளிலும் சிறிது காலதாமதம் ஏற்பட்டு விட்டது. சுத்திகரிப்பு நிலையத்திற்கான பணிகளின் மதிப்பீடுகள் மற்றும் பகிர்மானக் குழாய்களைப் பதிப்பதற்கான மதிப்பீடு

களும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கான 30,000 லிட்டர் மற்றும் 60,000 லிட்டர் கொள்ளளவு மேல் நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 1.50 லட்சம் லிட்டர் கொள்ளளவு நீர்தேக்கத் தொட்டி கட்டுவதற்கான ஒப்பந்தப்புள்ளி கொடுக்க ஒப்பந்தக் காரர்கள் சரியானபடி முன்வராததால் இரண்டாம்முறையாகக் கோரப்பட்டுள்ளது. 2 லட்சம் லிட்டர் கொள்ளளவு நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கான நிலம் 1990 பிப்ரவரியில்தான் பெறப் பட்டது. இதைக்கட்டுவதற்கான ஒப்பந்தப்புள்ளி விரைவில் கோரப்படும்.

இத்திட்டத்தின் எல்லா பணிகளும் 1991ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் முடிக்கப்பட்டு திட்டத்தை பயனுக்குக் கொண்டுவர எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் கூடலூருக்கும் அதனைச் சார்ந்த கீழே குறிப்பிடப்பட்டுள்ள 18 உட் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கு வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது :—

(1) கூடலூர் பஜார்.

(2) மேல் கூடலூர்.

(3) மத்திய கூடலூர்.

(4) பாண்டிப்பட்டு.

(5) கொக்கல்.

(6) ஹெல்த் கேம்ப்.

(7) இராஜகோபாலபுரம்.

(8) மார்த்தோம் நகர்.

(9) துப்புக் குட்டிப்பட்டு.

(10) கோவிப்பரா.

(11) அட்டிப்பள்ளி.

(12) தேவர்சோலா ரோடு.

(13) டோல்கேட்.

(14) சில்வர்க்ளௌடு.

(15) கீழ்த் தேவமலை.

(16) அலோகலா.

(17) நந்தட்டி.

(18) தொரப்பள்ளி.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நீண்ட அறிக்கையை அவையில் வைத்து இருக்கிறார்கள். இந்தத் திட்டம் நீண்ட காலமாக பல ஆண்டுகளாக இருந்தும் நீர் வசதி நல்ல முறையில் அருகிலேயே இருந்தும் இந்தத் திட்டத்தை முடிக்காததால் அந்தக் கூடலூர் நகர பஞ்சாயத்துக்கு உட்பட்ட 18 கிராமங்களுடைய, 18 இடங்களுடைய, பெயர்களை இதில் கொடுத்து இருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்களுக்கு குடிநீர்ப் பஞ்சம் வெயில் காலம் ஆனால் வந்து விடக்கூடிய ஒரு நிலைமை தொடர்வதைத் தடுப்பதற்கு எந்தக் காலத்திற்குள் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதை நான் அறிய விரும்புகிறேன். ஏன் இவ்வளவு கால தாமதம் ஏற்பட்டது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலதாமதத்திற்கான காரணங்கள் எல்லாம் இந்த விவர அறிக்கையில் கூறப்பட்டுள்ளன. இது உலக வங்கியிலிருந்து நிதிபெற்று செயல்படுத்தப்படுகின்ற திட்டம். ஆகவே உலக வங்கியினுடைய அப்புருவல் கிடைப்பதற்கு சிறிது காலதாமதம் ஏற்பட்டதால், குழாய்கள் வாங்குவது போன்ற பணிகளால் சிறிது காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. நில ஆர்ஜிதம் செய்வதிலே முதலில் தடங்கல் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்த நீண்ட காலத் தடங்கல்கள் எல்லாம் இந்த அரசு பொறுப்பு ஏற்று பார்க்க வேண்டும். 1989-90-ல் அவைகள் எல்லாம் நீக்கப்பட்டு இந்தப் பணிகள் துவங்கப்பட்டு இன்று ஓரளவுக்கு முழுமையாக நில ஆர்ஜிதம் போன்றவைகள் எல்லாம் முடிவு பெற்று இருக்கின்றன. ஆகவே நானே கூட இந்த மாதம் 25 ஆம் தேதி அங்கே நேரில் சென்று இந்தத் திட்டத்தினுடைய செயல்பாடுகளைப் பார்வையிட இருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். 1991ஆம் ஆண்டு செப்டம்பருக்குள் இந்தத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்று அதிகாரிகளுக்கு ஆணையிடப்பட்டிருக்கிறது. அதற்குள் முடிவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நமது அரசு இங்கே வந்ததற்குப் பிறகு இந்த வேலைகள் துரிதப்படுத்தப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் இதே மன்றத்திலே இந்த குடிநீர்த் திட்டத்தைப் பற்றி பல ஆண்டுகள் பேசியிருக்கிறோம். இந்த மஞ்சுஸ்ரீபிளான்டேசனில் பைப் போடுவதற்கு அனுமதி கிடைக்கவில்லை. பிர்லா தோட்டங்கள் என்பது எல்லாம் பழைய காலத்துக் கதை. அதெல்லாம் முடிந்து இப்போது நம்முடைய அரசு வந்து ஒரு வருடத்திற்கு மேல் ஆகியும் இந்த வேலைகள் துரிதமாகச் செய்வதற்கு அங்கே கீழே இருக்கிற பொறுப்பில் இருக்கும்படியான அதிகாரிகள் போதிய தீவிரம் காட்டாமல் இருந்து வருகிறார்கள் என்று பல செய்திகள் எங்களுக்கு வருகின்றன. மேலும் இப்போதுகூட கீழே பதிக்கப்பெற வேண்டிய குழாய்கள் பெரும் குழாய்கள் பம்பாயில் ஒரு கம்பெனிக்கு ஆர்டர் கொடுத்து அது கூட சரியான முறையில் காலத்தில் வந்து சேரவில்லை என்று கூறுகிறார்கள். இவைகளை எல்லாம் தாண்டி, ஓவர்கம் பண்ணி இந்த குறிப்பிட்டக் காலத்திற்குள் திட்டவட்டமான காலத்திற்குள் இந்தக் காரியங்களைச் செய்வதற்கு என்ன நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொண்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

10-15 மணி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளுடனேயே அந்தந்தத் தொகுதியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் விவாதிக்கின்றபோது எடுத்துச் சொன்னார்கள். அங்கே குழாய்களெல்லாம் 1990 மார்ச் மாதத்திலே வாங்கப்பட்டு விட்டன. ஆனால் அந்தக் குழாய்களைப் பதிப்பதற்கான டெண்டர் விடப்பட்டபோதுதான் முதல் டெண்டரிலே யாரும் முன்வராத காரணத்தால், இரண்டாவதாக அங்கே டெண்டர் விடப்பட்டிருக்கிறது. அதற்காகத் தான் நான் உறுப்பினர் அவர்களிடம் சொன்னேன், நானே கூட நேரிலே சென்று அந்தப் பணிகளை மேற்பார்வையிட இருக்கிறேன். என்று, விரைவிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்.

(அ) மதிப்பீட்டுக் குழு

திரு மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின், பொதுப்பணித் துறை